2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அக்ரஹாரம் ஊராட்சியில் தென்றல் நகர், மள்ளப்பள்ளி ஊராட்சியில் டோல்கேட், கொத்தனப்பள்ளி என்ற இடங்களில் B சென்டர் என்று உருவாக்கி பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த சென்டரில் இப்போது பால் வாங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த சென்டர் தொடர்ந்து பால் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதியைக் குறிப்பிட்டு தகவல் தெரிவிக்கப்பட்டால் நிச்சயமாக அந்தப் பகுதியில் மட்டுமல்ல, மனுக்கள் மூலமாக, எந்தெந்த இடங்களிலிருந்து சங்கங்கள் அமைக்க கோரிக்கை வைக்கப்படுகிறதோ, நிச்சயமாக அதை அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

ஏரிகளை ஆழப்படுத்துதல்

* **69639—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை ஆழப்படுத்தி மீன்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை அவ்வூராட்சி ஒன்றியம் தூர்வாரி ஆழப்படுத்திய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பின்னர், மீன் வளர்க்க மீன் துறையை அணுகும்பட்சத்தில், மீன் வளர்க்கத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்கப்பட்டு மிக நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இப்போது சேலம் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பள்ளப்பட்டி பகுதியிலே மாநகராட்சி மூலமாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக பள்ளப்பட்டி ஏரியைப் பயன்படுத்துவதற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இன்றைக்கு பள்ளப்பட்டி ஏரியைப் பொறுத்தவரை, 44 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளது. அந்த 44 ஏக்கர் நிலப்பரப்பிலே, 40 ஏக்கர் சேலம் மாநகராட்சியினுடைய பாதாள சாக்கடைத் திட்டம் அபிவிருத்தி செய்வதற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மீதி இருக்கின்ற 4 ஏக்கர் பரப்பளவிலே மாநகரக் காவல் துறை ஆணையாளர் அலுவலகம் கட்டுவதற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழகம் முழுவதும் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையிலே ஏரிகளிலே எந்தக் கட்டடமும் கட்டக்கூடாது என்ற சூழ்நிலையிலே, ஆக்கிரமிப்புகளை இடித்துக்கொண்டு வருகிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக அரசு, சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் நிதியொதுக்கி, அதைக் கட்டுவதற்கான பணி, கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலத்திற்கு மேலாக, தாமதமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு ஒரு தெளிவான முடிவெடுத்து, ஒன்று, இந்த ஏரிப் பரப்பளவில் அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா; அல்லது, அந்த ஏரியில் மீண்டும் தண்ணீர் நிற்பதற்கு ஆவன செய்யுமா என்பதற்கு ஒரு விரிவான விளக்கம் தரவேண்டும். அதேபோல், கன்னங்குறிச்சி ஏரியைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஏற்காட்டிலிருந்து வருகின்ற மழை நீர் அத்தனையும் அந்த ஏரியின் சுமார் 70 ஏக்கர் பரப்பளவிலே தேக்கப்பட்டு, கிட்டத்தட்ட 8 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்கின்றது. அந்த ஏரியிலே தண்ணீர் வந்து நிற்பதற்குத் தடையாக நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்த ஆக்கிரமிப்புகளை நீக்கி, மீண்டும் அந்த ஏரியிலே தண்ணீர் வருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீன்வளத் துறை அமைச்சரிடம் கேட்கிற கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறையைப் பொறுத்தளவிலே, உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துவதற்காக புதியதாக குளங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால், ஒரு ஐந்து ஹெக்டேர் அளவிற்கு நீங்கள் மேம்படுத்தவேண்டுமென்று நினைத்தால், ஒரு ஹெக்டேருக்கு 40,000 ரூபாய் மானியமும், அந்த மீன் குஞ்சு மற்றும் உரம் வளர்ப்பதற்கு ஒரு ஹெக்டேருக்கு 6,000 ரூபாய் பணமும் கொடுக்கப்படுகின்றது. தனியார்கள் அதுபோன்று அமைக்கவேண்டுமென்று நினைத்தால், அதற்கு அரசினிடத்திலே மனு கொடுத்தால் அது சம்பந்தமான உதவிகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு கன்னங்குறிச்சி ஏரியைப் பொறுத்தவரை அரசு நடவடிக்கை எடுத்து அதிலே மீன்களை வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே அதிலே மீன்களை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அங்கே ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற காரணத்தால் அதைச் செய்ய முடியவில்லை. ஆகவே, அரசு இந்தப் பள்ளப்பட்டி ஏரி மற்றும் கன்னங்குறிச்சி ஏரி பரப்பிலே மீண்டும் தலையிட்டு அதிலே ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்தப் பகுதியிலே தண்ணீரை சேகரித்து வைத்து, மீன் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை நீங்கள் தொடர்பு கொண்டு கேட்டால் அதற்கான உதவிகள் உங்களுக்குச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS